10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 331 வெள்ளிக்கிழமை 20 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

## யாழ்.பல்கலையில் அன்னை பூபதியின் நினைவேந்தல்



(விரிவான செய்தி 5ஆம் பக்கம்)

## மைத்திரிக்கு எதிராக லண்டனில் போர்



லண்டன்,ஏப்.20

லண்டனில் இடம்பெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை லண்டனை விட்டு வெளியேறக் கோரியும் சர்வதேசத்திடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் புலம்பெயர் தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

லண்டனில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெற்ற மண்டபத்துக்கு எதிரே இந்த ஆர்ப்பாட்டத்தை புலம்பெயர் உறவுகள் முன்னெடுத்தன.

தமிழினப் படுகொலைக்கு நீதிவேண்டும், 06 ▶

## தொண்டராசிரியர் நியமன மர்மம்

### வெளிப்படுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.20

தொண்டராசிரியர்களின் நியமனத்தில் நிலவிவரும் மர்மம் தொடர்பில் வெளிப்படுத்த கோருகிறது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

சங்கம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நெருக்கடியான காலங்களில் தொண்டராசிரியர்களாக கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல் ஆரம்பமாகியுள்ளது.

மத்திய கல்வி அமைச்சின் அதிகாரிகளால் வடக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் அடிப்படையில் 182பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுவிட்டது. எனினும் வடக்கு மாகாணத்தில் மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொண்டராசிரியர்கள் பதிவுகளுடன் கடமையில் இருந்தமை கண்டறியப்பட்டு 06 ▶

# முதலமைச்சருடன் இணையத் தயார்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

கொள்கையுடன் உறுதியாக இருக்கக் கூடிய தமிழ் மக்கள் பேரவையிலுள்ள பொது அமைப்புக்களுடன் இணைந்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட்டு ஒன்றை உருவாக்கினால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதில் இணைந்து கொள்ள சாதகமாகப் பரிசீலிக்கும்.

இவ்வாறு தமிழத் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். 06 ▶

## ஈ.பி.டி.பி யோடு கூட்டமைப்பு 'டீல்'

### அம்பலப்படுத்தினார் ரங்கன்



யாழ்ப்பாணம்,ஏப்.20

"ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியிடம் ஆதரவு கோரி தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தொலைபேசி ஊடாக பேசியமைக்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. தேவை எனில் அவற்றை வெளியிட நாம் தயாராக உள்ளோம். அத்துடன் இரட்டைவேடம் போடும் கூட்டமைப்பின் முகத்திரையை வெளிக்கொண்டுவரவும் தயார்" இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயக 06 ▶

## நீயா? நானா?

### ஆளுநர் – பதில் முதலமைச்சர் குடுமிப்பிடிசண்டை



யாழ்ப்பாணம்,ஏப்.20

வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களை நியமிப்பதில் மாகாண பதில் முதலமைச்சர் கலாநிதி க. சர்வேஸ்வரனுக்கும் மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயுக்கும் இடையே நேற்றுக் காலை முரண்பாடு ஏற்பட்ட நிலையில் அமைச்சு செயலர்களுக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன. 06 ▶



## தொழிற்சாலையில் அனர்த்தம்

### ஐவர் உயிரிழப்பு; பலர் காயம்

ஹொரணை,ஏப்.20

ஹொரணை, பெல்லப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள இறப்பர் தொழிற்சாலையில் ஏற்பட்ட திடீர் அனர்த்தத்தில் ஐந்து பேர் உயிரிழந்ததுடன், மேலும் பலர் பாதிப்படைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:

குறித்த தொழிற்சாலையில் உள்ள அமோனியா அமிலம் அடங்கிய குழியை சுத்தம் செய்வதற்காக சென்ற ஊழியர் ஒருவர் அந்தக் குழிக்குள் தவறுதலாக 06 ▶




## சுவிஸில் கோர விபத்து இலங்கையர் பலர் காயம்

ஜெனீவா,ஏப்.20

சுவிட்ஸர்லாந்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் இலங்கையர்கள் பலர் காயமடைந்திருப்பதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுற்றுலாவுக்குச் சென்ற இலங்கையர்களை ஏற் 06 ▶

## ஆடைக் கைத்தொழிலுக்கு ஜி.எஸ்.பி 'அவுட்'

கொழும்பு,ஏப்.20

ஆடைக் கைத்தொழிலுக்கு ஜி.எஸ்.பி வரிச்சலுகை வழங்கப்படமாட்டாது என வர்த்தக திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனைத் தவிர ஏனைய அனைத்து துறைகளுக்கும் இந்த வரிச்சலுகை கிடைக்கும் என வர்த்தக திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் நிமல் கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

ஜி.எஸ்.பி வரிச்சலுகையை எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் மீண்டும் இலங்கைக்கு வழங்குவதற்கு அமெரிக்கா தீர்மானித் 06 ▶

# கிளி. மாவட்ட மே தின நிகழ்வு இந்த முறை முழங்காவிலில்





இரணைதீவு, ஏப். 20

கிளிநொச்சி மாவட்ட மே தின நிகழ்வு, இந்த முறை முழங்காவிலில் இடம்பெற வுள்ளது.

இது தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வட மாகாணசபை உறுப்பினர்களான த.குரு குலராசா, சு.பசுபதிப்பிள்ளை மற்றும் கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பி னர்கள், கட்சியின் பிரதேச, வட்டார அமைப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த மே தின நிகழ்வு முழங்காவில் விநாயகர் விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும்.

நாச்சிக்குடா சந்தியில் இருந்து ஊர்தி, பவனிகளுடன் ஆரம்பமாகும் எழுச்சிப் பேரணி, பிரதான வீதி வழியாக நகர்ந்து முழங்காவில் விநாயகர் விளையாட்டு மைதானத்தைச் சென்றடைய உள்ளது. இதனைத் தொடர்ந்து, அங்கு சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் மாபெரும் மே தினக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தொழிற் சங்கப் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலருடைய சிறப்புரைகளும் இடம்பெற வுள்ளன.

கடந்த 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து 28 வருடங்களாக தமது சொந்த இடங்களுக்குப் போவதற்காகக் காத்தி ருந்து போராடி வரும் இரணைதீவு மக்க ளுடைய வாழ்வுரிமை மற்றும் தொழி லுரிமை ஆகியனவற்றை வலியுறுத்தியும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி இரவு பகலாகப் போராடி வரும் அவர்களது உறவுகளுக்கு நீதியை வேண்டியும், இந்த முறை மே தின நிகழ் வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஆ)

## விடுபட்ட பட்டதாரிகளுக்கு மீண்டும் நேர்முகத் தேர்வு

மன்னார், ஏப்.20

அரச சேவையில் இணைத்துக் கொள் ளுவதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படாத, மன்னார் மாவட்ட வேலையில்லாப் பட்டதாரி களை, மீண்டும் இணைத்துக் கொள்ள நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பிரதமருக்கு விடுத்த வேண்டுகோளையடுத்தே இந்த நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேலையில்லாப் பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள் ளும் வகையில், மன்னார் மாவட்ட செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் முதல் மூன்று பிரிவுக ளாக நேர்முகத் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன.

இந்தத் நேர்முகத் தேர்வுக்கு மன் னார் மாவட்ட செயலகத்தில் 515 பட்ட தாரிகளுடைய பெயர்கள் மட்டுமே அறிவிறுத்தல் பலகையில் ஒட்டப்பட்டி ருந்தது.

ஆனால், மன்னார் மாவட்டத்தில் 700 இற்கும் மேட்பட்ட பட்டத்தாரி கள் உள்ளனர். இதனால், நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வராத ஏனைய வேலையற்ற பட்டதாரிகள், இந்த விட யத்தை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இதனைத் தொடர்ந்து, அவர் இந்த விடயத்தைப் பிரமரின் கவனத்துக்குக் கொண்டு சென்றதைத் தொடர்ந்து, விடுபட்டவர்களும் நேர்முகப் பரீட் சையில் தோற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (ஆ)

# மீதொட்டமுல்ல அனர்த்தம்: இழப்பீடு வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஏப். 20

மீதொட்டமுல்லவில் குப்பை மேடு சரிந்து விழுந்த அனர்த்தத்தால், காணிகளை இழந்தவர்களுக்கு, இழப்பீட்டுத்தொகை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார். இடர்முகாமைத்துவ அமைச்சில் இது தொடர்பாக நேற்று நடை பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்ததில், சுமார் 40 வாகனங்கள் சேத மடைந்துள்ளன. இவற்றில் சில வாகனங்கள் தொடர்பிலான ஆவணங்களைக்கூட சமர்ப்பிக்க முடியாத நிலை காணப்படு கிறது. இதன் காரணமாக பெரும்பாலா னவர்களின் தொழில் முயற்சிகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்தின் விசேட குழுவின் மூலம் சம்பந்தப்பட்ட தகவல்களை துரிதமாக பெற்றுக்கொண்டு பாதிக்கப்பட்ட வாகனங்களுக்கு நட்டஈட்டை வழங்கு வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்தக் குப்பை மேட்டில் தற்போது சிறியளவிலான வெடிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகி உள்ளது. அது தொடர்பாக விரைவாக அறிக்கை சமர்ப் பிக்கப்பட வேண்டும். தற்பொழுது அர சாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள வீடுகளை பெற்றுக்கொள்ளாது வீட்டுக்கான நிதியு தவியை பெற்றுக்கொள்வோருக்கு கடன் உதவியை வழங்கும் பணி மே மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது." என்றும் அவர் தெரி வித்தார். (ஆ)

# நவீன வசதிகளுடன் மருதனார்மட சந்தை

யாழ்ப்பாணம், ஏப். 20

எமது ஆட்சிக்காலத்தில் நவீன வசதிகளு டன் கூடிய முதல் தர சந்தையாக மருதனார் மடப் பொதுச்சந்தை மாற்றியமைக்கப்படும் என வலி. தெற்குப் பிரதேச சபையின் தலைவர் க.தர்சன் தெரிவித்துள்ளார்.

வலி. தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட மருதனார்மடப் பொதுச்சந்தைக்கு தவிசாளர் க.தர்சன் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இதில் பிரதேச சபையின் உடுவில் அலுவலகப் பொறுப்பதிகாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர், சந்தை மேற்பார்வையாளர், வருமானப் பரிசோதகர் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதன்போது, அங்கு வியா பாரத்தில் ஈடுபடுகின்ற வியாபரிகள் மற்றும் நுகர்வோர்களுடன் அவர் கலந்துரையாடி னார். இதனைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"யாழ். மாவட்டத்திலேயே அதிக வரு மானத்தை ஈட்டுவதில் 2 ஆம் இடத்தில் மரு தனார்மடப் பொதுச்சந்தை உள்ளது. இந்தச்



சந்தை வியாபாரிகளுக்கும், நுகர்வோருக்கும் சௌகரியமான வசதிகளோடு அமைக்கப்பட உள்ளது. இங்கு கிணறு, மலசலகூடம் மற்றும் திண்மக்கழிவகற்றல் வசதிகள் உடனடியாக மேற் கொள்ளப்படும்." என்றும் அவர் தெரிவித்துள் ளார். (ஆ)

## மீனவர்களுக்கு விளக்க மறியல்

மன்னார், ஏப். 20

மன்னாரில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்ட, ஐந்து மீனவர்களையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு இடப்பட்டுள்ளது.

இவர்கள் ஐவரையும் மன் னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன் நேற்று ஆஜர்படுத் திய போதே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை, மன்னார் தென் கடற் பரப் பான சவுத்பார் பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர்.

இதன்போது, இவர்களின் பட கில் இருந்து 92 கிலோ மீன்க ளும், 20 பண்டல் வெடிமருந்துப் பொருட்களும் (ஜெலிக்னைற் குப்பிகள்) மீட்கப்பட்டுள்ளன.

## கினிகத்தேனவில் சடலம் மீட்பு

கினிகத்தேன, ஏப்.20

கினிகத்தேன பொலிஸ் பிரிவுக்குட் பட்ட ரஞ்சுராவ ஹத்லாவ பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

கினிகத்தேனையைச் சேர்ந்த சுனில் வனிகசேகர திஸாநாயக்க (வயது- 59) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இந்த நபர் தனது வீட்டில் தனி மையில் வாழ்ந்து வந்துள்ளார். இந்த நிலையில், அவர் வீட்டிலிருந்து வெளியே வராததை அடுத்து உறவினர்கள் அந்த வீட்டுக்கு சென்று கதவைத் திறந்துள் ளனர். அப்போது அவர் உயிரிழந் திருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இவர் தினமும் நண்பர்களுடன் சேர்ந்து மதுபானம் அருந்துவார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளைக் கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# நாட்டு நலன் கருதி திருத்தல யாத்திரை



யாழ்ப்பாணம், ஏப். 20

நாட்டில் இனங்களுக்கிடையே பேதங் கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டி, யாழ்ப்பாணம் நல்லூரில் இருந்து சிவனொளிபாதமலை வரை புனித திருத்தல தரிசன யாத்திரை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நேற்றுக் காலை நல்லூர் கந்தன் ஆல யத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளை அடுத்து, இந்தத் திருத்தல தரிசன யாத் திரை ஆரம்பமாகியது.

இதில், சமயப் பெரியார்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த யாத்திரையை இலங்கை முத லுதவிச் சங்கம், இந்து சமய தொண் டர் சபை, யாழ்.சின்மயா மிஷன் ஆகியன இணைந்து ஒழுங்கு செய்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ஆ-4)

எதிரொலி
Ethiroli
வெள்ளி, 20 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

# என்னடா, இப்பிடிப் பண்றீங்களேடா?

எது அவசியமோ அதைச் செய்யாமல், அவசியமில்லாத ஒன்றைத் தேவையில்லாமல் சீண்டுதல் எம்மவர்களுக்குக் கைவந்த கலை. நாட்டில் இப்போது போர் ஓய்ந்து விட்டாலும் சாவுகள் குறையவில்லை. காரணம், விபத்துகளும், கொடிய நோய்களும் முன்னைய காலத்தை விடவும் இப்போது அதிகமதிகமாக உயிர்களைக் குடிக்கத் தொடங்கியுள்ளன. நாளொரு நோயும் பொழுதொரு சாவுமாக விடிகின்றன நாட்கள். விபத்துகளை சாரதிகள் மனம் வைத்தால் தவிர்க்கலாம். ஆனால் நோய்களைத் தடுப்பது சுகாதாரத் துறையினரின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளன. ஆனால் டெங்கு முதலான நோய்கள் பரவுவதற்கு ஏதுவான சூழலை, வீடுகளில் தேடிப்பிடிக்கும் சுகாதாரத் துறையின் வீதிகளிலும், வடிகால்களிலும், அலுவலகங்களிலும், இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளிலும் குப்பைகளும், கழிவு நீரும் தொன் கணக்கில் இருந்தாலும், மூக்கைப் பிடித்துக் கொண்டு அப்பால் நகர்ந்துவிடுவார்களே தவிர, அதை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை.

உணவகங்களில் எப்போதாவது இருந்துவிட்டு மட்டுமே சுகாதாரத் துறையினரின் பரிசோதனைகள் நடைபெறுகின்றன. எஞ்சிய நாட்களில் எந்தக் கூச்ச நாச்சமும் இன்றி, கடைக்காரர்கள் தங்கள் வித்தையைக் காட்டிவிடுவார்கள். பொது இடங்களில் புகை பிடிக்கக் கூடாது என்று சட்டமிருந்தாலும், அதை எவரும் பின்பற்றுவதில்லை. அப்படி வீதிகளிலும், மக்கள் கூடுமிடங்களிலும் பயமில்லாமல் புகையை ஊதித் தள்ளுபவர்கள் பற்றியும் இந்தச் சுகாதாரத் துறையினர் அக்கறைப்படுவதில்லை.

ஆனால், புதிதாக என்ன தடை போட்டு குழப்பங்களை உண்டாக்கலாம் என்பதில் மட்டும் சுகாதாரத் துறையினர் தெளிவாக இருக்கிறார்கள். அந்த வரிசையில் இப்போது கோயில் அன்னதானங்களுக்கு தடை போட்டுள்ளனர் சுகாதாரத்துறையினர்.

"அனுமதி வழங்கப்பட்ட, பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட அன்னதான மடங்களில் மட்டுமே இனிமேல் அன்னதானங்கள் வழங்கலாம். அவ்வாறில்லாமல், அனுமதி பெறாமல் எந்தவொரு கோயிலிலும், எவரும் அன்னதானம் கொடுக்கக் கூடாது" என்று கறாராக சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. அதை மீறினால் தண்டம், சிறை என்று தண்டனைகள் வேறு.

தமிழர்களின் பாரம்பரியத்தில் அடுத்தவர்களின் பசி போக்குதல் என்பது தலையாய ஒன்று. அந்தப் பண்பாட்டின் நீட்சியாகவே கோயில்களில் அன்னதானம் வழங்கி, இல்லாதவர்களின் பசியை ஆற்றுதலைத் தமிழர்கள் பின்பற்றுகிறார்கள். இந்த அன்னதானம் வழங்கல் என்பது தனியே மடங்களில் மட்டும் வழங்கப்படுவதில்லை. சிறு தெய்வங்கள் உள்ள குட்டிக் கோயில்களில் கூட அன்னதானம் வழங்குவார்கள். சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல் படி, அப்படியான சிறு தெய்வ ஆலயங்களில் அன்னதானம் இனிமேல் வழங்கப்படமுடியாத நிலை தோன்றும். பணத்தின் மேல் படுத்திருக்கும் பெரும் ஆலயங்களில் உள்ள அன்னதான மடங்களில் மட்டுமே அன்னதானம் நிகழும். மற்ற ஆலயங்களில் அனுமதிக்கு விண்ணப்பித்து, சுகாதாரப் பரிசோதகர் வந்து சோதித்து, அனுமதி வழங்குவதற்கிடையில் அடுத்த திருவிழாவும் வந்துவிடும். இனிமேல் ஆலயங்களில் பொங்கக் கூடாது, தீர்த்தம், பிரசாதம் வழங்கக் கூடாது என்று தடைகளின் வரிசை நீளலாம். அவ்வளவு ஏன், வீடுகளில் சமைப்பதாயின் கூட சுகாதாரத்துறையின் அனுமதி பெற்றே சமைக்கவேண்டும் எனவும் ஒரு சட்டம் வரலாம்.

ஆனால் இந்த சட்டங்கள் எல்லாம் இளித்த வாயர்களான நமக்கு மட்டுமே. அடுத்த மாதம் வெசாக் பந்தல்களில் இந்தச் சட்டங்களும், சுகாதாரத் துறையினரும் பம்மித்தான் ஆகவேண்டும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# குழந்தை வைத்திய நிபுணரை நியமிக்குமாறு தெல்லிப்பழையில் கர்ப்பிணிகள் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம்,ஏப்.20

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு குழந்தை வைத்திய நிபுணரை நியமிக்கக் கோரி, ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக பொது மக்கள் மற்றும் கர்ப்பிணிகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

நீண்ட காலமாக குறித்த வைத்தியசாலையில் குழந்தை வைத்தியர்கள் இல்லை என்றும் இதனால் தாம் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் விசனம் வெளியிட்டனர்.

எங்கள் குழந்தை நலனில் விழிப்பாக இருக்காதது ஏன், வடக்கு மாகாண அமைச்சரே பதில் கூறும், உயிர் உலகைக் காண வரும்போது மருத்துவர் இன்றி மடிவதா? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். (த)

## 600 போதை மாத்திரைகளுடன் இரண்டு இளைஞர்கள் கைது!



கொழும்பு,ஏப்.20

போதை ஏற்படுவதற்காக இளைஞர்கள் பயன்படுத்தும் 600 போதை மருந்துகளை வைத்திருந்த இருவர் நேற்று இரானி சந்தியில் கைது செய்யப்பட்டதாக தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ள்ளனர்.

கெக்கிராவை மற்றும் பதுளை பகுதிகளை சேர்ந்த 27 மற்றும் 33 வயதுடைய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இரு சந்தேக நபர்களும் இராணி சந்தியில் தற்காலிக கடை ஒன்றில் தையல் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர்கள் தையல் தொழிலுக்கு மேலதிகமாக போதைப்பொருட்களை தூர பகுதிகளிலிருந்து கொண்டு வந்து இளைஞர்கஞ்க்கு விற்பனை செய்வதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## போராட்டம் நடத்திய மாணவிக்கு கல்வியமைச்சரால் கிடைத்தது தீர்வு



கொழும்பு,ஏப்.20

கனேமுல்லயில் எயிட்ஸ் தொற்றுக்கு ஆளாகியுள்ளார் என்ற பிரசாரத்தினால் பாதிக்கப்பட்ட மாணவிக்கு வேறு இடத்தில் உள்ள தேசிய பாடசாலையில் கற்பதற்கான வாய்ப்பை அரசாங்கம் வழங்கியுள்ளது.

எயிட்ஸினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற பொய்யான பிரசாரத்தினால் பாதிக்கப்பட்ட மாணவியின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுவிட்டதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

மாணவிக்கு தற்போது புதிய பாடசாலை கிடைத்துள்ளது மாணவியின் தந்தைக்கும் புதிய தொழில் கிடைத்துள்ளது என தனது டுவிட்டரில் தெரிவித்துள்ள பிரதியமைச்சர், கல்வியமைச்சரே இந்த நடவடிக்கைகளை எடுத்தார் என குறிப்பிட்டுள்ளார்.

தனது தாய் எயிட்ஸினால் பாதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து தான் அவமானப்படுத்தப்படுவதாக 10 வயது சிறுமி கடந்த மாதம் ஜனாதிபதியிடம் முறையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தனது பாடசாலை அதிபர் பாரபட்சம் காட்டுகின்றார் எனவும் குறிப்பிட்ட மாணவி தெரிவித்திருந்தார்.

இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவும் இந்த விடயத்தில் தலையிட்டிருந்தது.

## ஜனநாயகம் தாராளம்

கொழும்பு,ஏப்.20

யார் என்ன அறிவிப்புக்களை விடுத்தாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உயர் தரத்தில் ஜனநாயகம் இருப்பதாக அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர் உட்பட கட்சிக்கான அதிகாரிகள் நியமனத்திலும் தற்பொழுது சுயாதீனமான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.தே.கட்சிக்குள் ஜனநாயகம் குறைவு எனவும், குறிப்பிட்ட சிலரிடம் அதிகாரம் சுற்றுவதாகவும் அக்கட்சியிலுள்ள முக்கிய உறுப்பினர்களினால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட வேளையிலும் இந்த கருத்தை அடிப்படையாக வைத்தே பிரதமருக்கு எதிராக இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தலைமையில் 27 எம்.பிக்கள் கூட்டுச் சேர்ந்ததன் மூலம் கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினை வீதிக்கு வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மே மாதம் 7 ஆம் திகதியே விடுமுறை




கொழும்பு,ஏப்.20

2018 மே மாதம் 01ஆம் திகதிக்கான அரச மற்றும் வங்கி விடுமுறை இரத்து செய்யப்பட்டு அதற்கு மாற்றீடாக மே மாதம் 07ம் திகதி அரச மற்றும் வங்கி விடுமுறை தினமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி முதல் மே மாதம் 2ஆம் திகதி வரை வெசாக் வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், மே மாதம் 01ம் திகதியில் அனுஷ்டிக்கப் படுகின்ற உலக தொழிலாளர் தினம், இலங்கையில் மே மாதம் 07ம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி மே மாதம் 1ஆம் திகதி உலக தொழிலாளர் தினத்தில் வழங்கப்படுகின்ற அரச மற்றும் வங்கி விடுமுறை மே மாதம் 07ம் திகதி வழங்கப் படுவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அனைத்து தொழில் தருனர்களும் தமது தொழிலாளர்களுக்கு 1971ஆம் ஆண்டு 29ம் இலக்க சட்டத்தின் கீழ் மே மாதம் 07ம் திகதி சம்பளத்துடனான விடுமுறை வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அதேநேரம் அன்றைய தினம் வர்த்தக விடுமுறை தினமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த)

## இன்று நாளும் கோளும்

20.04.2018 வெள்ளிக்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 07 ஆம் நாள்

பஞ்சமி மு.ப. 11.16 வரை | மிருகசீருடம் மு.ப. 11.30 வரை | குளிகை மு.ப. 07.30-09.30

இராகுகாலம் 10.30- 12.00 | சுபநேரம் காலை 09.30 - 10.30 | எமகண்டம் பி.ப. 03.00 - 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமைதி | பொறுமை | நட்டம் | அனுகூலம் | வெற்றி | மேன்மை | தெளிவு | நலம் | சாந்தம் | நன்மை | வரவு | ஜெயம் |



# வடக்கில் இருந்து தெற்குக்கு நல்லுறவுப் பயணம் ஆரம்பம்!

வவுனியா,ஏப்.20

வடக்கில் இருந்து தெற்குக்கான நல்லுறவுப் பயணம், வவுனியாவில் இருந்து வன்னிப் பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையிலான ஒற்றுமை நல்லுறவு, நம்பிக்கையுடனான நல்லிணக்கம் என்பவற்றை வலுப்படுத்தும் நோக்கத்துடன் வவுனியா, மன்னார் பொலிஸ் பிராந்தியங்களில் உள்ள 22 பொலிஸ் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 44 உறுப்பினர்கள் தெற்கு, ஊவா மற்றும் மேல் மாகாணங்களுக்கு இந்தப் பயணத்தை மேற்கொள்ள உள்ளனர். (ஆ)

## உடவளவயில் அபாயம் இல்லை

உடவளவ, ஏப்.20

உடவளவ நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டில் எந்தவித அபாய நிலைமையும் இல்லை என்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த அணைக்கட்டில் வெடிப்பு ஏற்பட்டதைப் போன்றதொரு நிலைமை காணப்பட்டது. இதனை அடுத்து, நேற்று முன்தினம் நேரில் சென்று அணைக்கட்டைப் பார்வையிட்ட பின்னரே அவர் இவ்வாறு கூறினார்.

"அணைக்கட்டில் வெடிப்புகள் ஏதுவும் ஏற்படவில்லை. இது குறித்து மக்கள் அச்சப்படத் தேவையில்லை. பாரிய கொங்கிறீட் அணைக்கட்டுகளில் கோடுகள் உருவாகின்றமை வழமையானது. இதனைப், பொறியியலாளர்கள் உறுதிப்படுத்தி உள்ளனர்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## உரத் தட்டுப்பாடு எதுவும் இல்லை




கொழும்பு, ஏப்.20

நாட்டில் உரத்தட்டுப்பாடு எதுவும் கிடையாது எனக் கமத்தொழில் அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

உரத்தட்டுப்பாடு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"எதிர்காலத்திலும் உர விநியோகத்தில் தட்டுப்பாடும், தாமதமும் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது. சகல விடயங்களையும் கணினி மயப்படுத்தி வருவதால் ஊழல் மோசடிகளுக்கும் இடமில்லை. யூரியா, ரி.எஸ்.பி, எம்.ஓ.பி, எஸ்.ஏ போன்ற சகல வகை உரங்களும் ஆயிரத்து 500 ரூபாவுக்கு குறைவான விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும்.

ஒரு பொதி யூரியாவின் விலை மூவாயிரத்து 500 ரூபாவாக இருந்தால் அரசாங்கம் இரண்டாயிரம் ரூபாவைப் பொறுப்பேற்கும்.

அதேபோன்று நெற்செய்கைக்கான உரப் பொதிக்கான செலவில் மூவாயிரம் ரூபாவை அரசாங்கம் ஏற்கிறது. இது தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், 011-303-6666 என்ற தொலைபேசி ஊடாக அறிவிக்கலாம்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# சதொச நிறுவனத்துக்கு 400 கோடி ரூபா வருமானம்

கொழும்பு, ஏப்.20

தமிழ், சிங்களப் புத்தாண்டு காலத்தில் சதொச நிறுவனம் 400 கோடி ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது என வணிக, கைத்தொழில் அமைச்சின் பணிப்பாளர் இந்திக்கா ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் நிறுவனம் ஈட்டிய ஆகக் கூடுதலான வருமானம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"தமிழ், சிங்களப் புத்தாண்டு காலத்தில் சதொச கிளைகள் மூலம் 40 சதவீத விலைக்கழிவு வழங்கப்பட்டது. இது வாடிக்கையாளர்களை கவர்ந்திழுக்க வழி வகுத்தது. பண்டிகைக் காலத்தில் சதொச விற்பனைக் கிளைகள் முழுமையாக கூடுதலான நேரம் திறந்து வைக்கப்பட்டது. இதுவரை வாடிக்கையாளர்களிடம் இருந்து எந்த வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவிதார். (ஆ)




## சுதாகரனின் விடுதலைக்காக மட்டு நகரில் உண்ணாவிரதம்

மட்டக்களப்பு, ஏப். 20

தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி, மட்டக்களப்பில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மகளிர் அணியின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்னால் இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த உண்ணாவிரத்தில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மகளிர் அணித் தலைவியும், மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினருமான செல்வி மனோகரன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் சுசிகலா அருள்தாஸ், கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, "தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளுக்காக அவரின் மீது கருணை காட்டி, ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும்." என உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். (ஆ)

## புலமைப் பரிசில்

கொழும்பு, ஏப்.20

ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளில், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு 12 ஆயிரம் ரூபா பெறுமதியான புலமைப்பரிசிலை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"இந்தப் புலமைப்பரிசில் தொகையை பெறுவதற்காக மூவாயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

விண்ணப்பங்கள் கணினிமயப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த விண்ணப்பங்களை ஏற்பதற்கான கால எல்லை முடிவடைந்துள்ளது .

எனினும், இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் விரைவாக விண்ண்ப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

இந்த முறை ஐயாயிரம் பேருக்கு இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்பட உள்ளது" என்று நிதியத்தின் பிரதி பொது முகாமையாளர் வசந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார். (ஆ)

## நியாய விலையில் மீன் விற்பனை



கொழும்பு, ஏப்.20

கடற்றொழில் கூட்டுத்தாபனம் புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் மீன்களை நியாய விலையில் விற்பனை செய்தமையால், சந்தையில் மீன் விலை ஸ்திரமட்டத்தை எட்டியுள்ளது என கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூல அபிவிருத்தி அமைச்சரும், மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

"முன்னைய ஆண்டுகளில் பண்டிகைக் காலம் பார்த்து வர்த்தகர்கள் மீன் விலையை உயர்த்துவர். இதனால், நுகர்வோர் சிரமப்பட நேர்ந்தது. இதனைக் கருத்திற் கொண்டு மீன் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த முறை ஆகக் கூடுதலாக நுகரப்படும் நான்கு வகை மீன்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டன. இதன் காரணமாக கடற்றொழில் கூட்டுத்தாபனமும் கூடுதல் வருவர்யைப் பெற முடிந்தது." என்றும் அவர் மேலும் தெரிவித்தார்..

## காலியில் கிராம சக்தி

காலி , ஏப்.20

காலி மாவட்டத்தில் கிராம சக்தி செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கடந்த வருடம் ஒரு கோடி 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி செயலகம் தேவையான நிதியை வழங்கி உள்ளது. இதன் அடிப்படையில் மாவட்டத்தின் 19 பிரதேச செயலகப் பிரிவுகளில் 139 அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன என காலி மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவு தெரிவித்துள்ளது. (ஆ)

## ஈரான் சபாநாயகர் இலங்கை விஜயம்




கொழும்பு, ஏப்.20

ஈரானிய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் அலி லரிஜானி நேற்றுமுன்தினம் இலங்கை வந்துள்ளார்.

வியட்நாம் விஜயத்தை பூர்த்தி செய்துக் கொண்டு இலங்கைக்கு வருகை தந்த ஈரானிய சபாநாயகரை, அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தலைமையிலான குழுவினர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார்கள்.

இவர் இங்கு தங்கியிருக்கும் காலப்பகுதியில் பிரதமர் மந்திரி ரணில் விக்ரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோரைச் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)







# அன்னை பூபதியின் 30 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

மட்டக்களப்பு, ஏப்.20

தியாக தீபம் அன்னை பூபதியின் 30 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு, கிழக்கில் நேற்று நினைவு கூரப் பட்டுள்ளது.

இந்தியப் படை உடனடியாகப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுக்களின் ஈடுபட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, கடந்த 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி அன்னை பூபதி அகிம்சை வழியில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்.

அந்த வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் அன்னை பூபதியின் உருவப் படத்துக்கு மலர் தூபி, சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப் பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் பல்கலைக் கழக துணைவேந்தர், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மட்டக்களப்பு நாவலடியில் அன்னை பூபதியின் 30 ஆம் ஆண்டு நினைவு தினம் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அனுஷ்டிக்கப்பட்டது.

அன்னை பூபதியின் பிள்ளைகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து காலை 9 மணிக்கு அன்னையின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து ஈகைச் சுடரை ஏற்றினர்.

இதனைத் தொடர்ந்து, அவரின் பிள்ளைகள் உறவினர்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டு. இணைப்பாளர் த.சுரேஸ், மட்டு. மாநகர சபை மேயர் தியாகராஜா சரவணபவன், ஐக்கிய தேசியக் கட்சி மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் வே.மகேஸ்வரன் அரசியல் கட்சியினர்கள் பொது மக்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தினர். (ஆ)

## உதைபந்தாட்ட சம்மேளனத்தில் நிதி மோசடி

கொழும்பு, ஏப். 20


உதை பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் உயர் அதிகாரி ஒருவர், நிதிக்குற்றவியல் பிரிவினரின் இரகசிய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

உதை பந்தாட்ட சம்மேளனத்தில் இடம்பெற்ற, 20 மில்லியன் ரூபா நிதி மோசடி சம்பவம் தொடர்பிலேயே இவர் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்றும், இவர் விரைவில் கைது செய்யப் படலாம் என்றும் நிதிக்குற்றவியல் விசாரணைப் பிரிவு வட்டாரத்தில் இருந்து இருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன.

உதை பந்தாட்ட சம்மேளனத்துக்குரிய நிதியை மோசடி செய்த விவகாரத்தில், மேலும் சில உயர் அதிகாரிகள் சம்மந்தப்பட்டுள்ளனர் என்றும், விளையாட்டுத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கும் இதில் தொடர்புள்ளதாக நிதி குற்றவியல் விசாரணைப் பிரிவின் பொலிஸார், சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

விளையாட்டுத்துறை அமைச்சில் இடம்பெற்ற 59 மில்லியன் நிதிமோசடி தொடர்பாக அமைச்சர் மஹிந்தானந்த அழுத்தகமகே கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ஆ)

# பிளவுபட்ட நாடு சீர்குலையும்



கொழும்பு, ஏப். 20

இனம் என்ற ரீதியில் ஒரு நாடு பிளவு பட்டிருக்குமானால், அது சீர்குலைந்து விடும் . அவ்வாறான நாட்டுக்கு எதிர்காலம் இல்லை என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வமதக் கலந்துரையாடல் நிகல்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"எமக்கு மத்தியிலுள்ள தேசிய பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும் . கடந்த மாதம் அம்பாறையிலும், அதனைத்தொடர்ந்து கண்டியிலும் ஏற்பட்ட துர்ப்பாக்கிய சம்வத்தால் நாட்டுக்கும் எமது பொருளாதாரத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இது போன்ற செயற்பாடுகளால் மிகவும் கௌரவத்தை பெற்றிருந்த எமது நாட்டின் நற்பெயருக்கு பெரும் களங்கம் ஏற்பட்டது. இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தப்படுவது முக்கியமாகும் . ஒழுக்கத்தை மதிக்கும் நாட்டை உருவாக்குதன் மூலம் நாடு வளர்ச்சியடையும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் சீர்குலைவுதான் ஏற்படும்.

அபிவிருத்தி கண்ட அனைத்து நாடுகளும் நிலையான அபிவிருத்தியை அடைய இனங்களுக்கு இடையில் ஏற்பட்ட ஐக்கியமே காரணமாகும்." என்று அவர் தெரிவித்தார்.

(ஆ)

# அக்கரைப்பற்றில் காணி அபகரிப்பு

அக்கரைப்பற்று, ஏப். 20

அக்கரைப்பற்று மாநகர சபையின் வடக்குப் புறத்தில், காணி அபகரிப்புகள் மற்றும் அரச காணிகளைக் கையகப்படுத்தும் வேலைகளும், முன்னெடுக்கப்பட்டு வருவதாக அக்கரைப்பற்று மாநகர முதல்வரின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.



"அரச காணிகளை அபகரிப்பதால், அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில், நகர அபிவிருத்தி அமைச்சு, காணி அமைச்சு, சுற்றாடல் வள அமைச்சு, ஜனாதிபதிச் செயலகம், பிரதமர், நீர்பாசன அமைச்சு, பொலிஸ் தலைமையகம் போன்றவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில், அக்கரைப்பற்று மாநகர சபையினுடைய உப்பளம் என வர்ணிக்கப்பட்ட நீர் ஏந்தும் பிரதேசம், தற்போது மணல் அகழும் இடமாக மாறி உள்ளது." என்று கரையோரப் பாதுகாப்பு மையத்தின் தலைவர் எம். எச்.காலித் இம்ரான் தெரிவித்துள்ளார். (ஆ)

## "குறூப் 16" அறிவிக்கவில்லை

கொழும்பு,ஏப்.20

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகிய 16 பேரும் நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சி ஆசனத்தில் அமர்வது குறித்து எடுத்துள்ள தீர்மானத்தை இதுவரையில் உத்தியோகபூர்வமாக சபாநாயகருக்கு அறிவிக்கவில்லையென நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்வதாயின் எதிர்வரும் 8ஆம் திகதி புதிய நாடாளுமன்ற அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் சபாநாயகருக்கு அறிவிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## முதலியின்ரை குப்பைப் பிரசங்கம்

"நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும். நாள் தோறும்...." என்ன முதலி சினிமாப் பாட்டோடை வாறாய் எண்டு முதலீட்டைக் கேட்டன். "ஏன் நான் பாடப்பிடாதோ?" எண்டு என்னை குறுவிச்சு ஒரு பார்வை பாத்தான். நான் பயந்திட்டன்.

"இல்லை, வழமையாப் பாட்டெண்டு தேவாரத்தைத்தான் பாடுறனி. இண்டைக்குச் சினிமாப் பாட்டோடை... அதுதான்?" எண்டன்.

"அரசியல் தெரியாத ஒருதனை அரசியல்வாதி எண்ணுறியள். பேசத்தெரியாத ஒருதனைப் பேச்சாளர் எண்ணுறியள். படிக்காத ஒருதனை மேதை எண்ணுறியள். எழுதத் தெரியாத ஒருதனை எழுத்தாளர் எண்ணுறியள். கொப்பி அடிச்ச ஒருதனை கலாநிதி எண்ணுறியள். அப்ப பாடத்தெரியாட்டிலும் ஏதோ ராகமாக் கதைக்கிற என்னை பாட்டுக்காறன் எண்டு சொல்ல ஏன் மாட்டன் எண்ணுறியள்." – எண்டது முதலீன்ரை ஞாயம்.

அது சரி காலையிலை ஏன் சூடாநிக்கிறாய் முதலி எண்டு கேட்டன். வெள்ளனவே ஆரோ ஒருத்தன் என்னைக் குழப்பிவிட்டிட்டான். நாலரை மணிக்கு எழும்பிப் பூப்பிடுங்கப் போனன். ஆரோ தன்ரை வீட்டுக் குப்பையைக் கொண்டு வந்து என்ரை படலையோடை சாத்திவிட்டிட்டுப் போட்டான். நல்ல காலம் ஆள் என்ரை கையிலை எம்பிடேல்லை. பிடிச்சிருந்தால் ஆளைச் சம்பல் ஆக்கியிருப்பன். இருட்டுக்கை மினிங்கிக் கொண்டு கிடந்திது. தொடவும் பயமாக்கிடந்திது. ஏதேன் செய்வினை சூனியமோ எண்டு பயந்து நான் கிட்டப் போகேல்லை. ஆனால் விட்டிட்டுப் போகவும் பயமாக்கிடந்திது. படலைக்குக் கிட்டவா கதிரை ஒண்டைப் போட்டுக் கொண்டு இருந்து ரோச்சு லைட்டை அடிச்சுக் கொண்டு இருந்தால், கோயிலுக்குப் போற ஆக்கள், சந்தைக்குப் போற ஆக்கள், போயிலை வேலைக்குப் போற ஆக்கள் எண்டு எல்லாரும் ம்தலி அண்ணை உதிலை ஏன் இருக்கிறாய் எண்டு கேட்டபடி. அவைக்குக் குப்பை படலைக்குள்ளை சாத்திக் கிடக்கிற கதையைச் சொல்லலாமோ? அப்பிடியே செம்பரத்தேக்கை தலையை மறைச்சுக் கொண்டு றோட்டாலை போற வாற ஆக்களின்ரை கண்ணுக்குத் தென்படாமல் இருந்தால்... பொல பொல எண்டு விடிஞ்சிது. மனுசி பற்பொடியை வாயிலை வைச்சபடி வந்ததைக் கண்டு தைரியம் வர மெல்ல எழும்பினன். ஏன் உதிலை இருந்து பதுங்கிறியள் எண்டு கேட்டாள். குப்பைக் கதையைச் சொன்னன். கல கல வெண்டு சிரிச்சாள். அது நான் தான் வைச்சனான். சொல்ல மறந்து போனன். நீங்கள் விடிய முன்னம் எழும்பி இருட்டோடை ஆக்கள்வர முன்னம் கொண்டு போய் பக்கத்து வளவுக்கை எறியட்டும் எண்டு தான் வைச்சனான். எண்டு சொன்னதுதான் தாமதம் மனுசிக்கு இரண்டு போடலாம் எண்டு ஓங்கின கையை மெல்ல மடக்கிப் போட்டன்.

மனுசி எண்டாலும் பிழை பிழை தான். எங்கடை படலையடியிலை ஆரேன் கொண்டு வந்து வைச்சிட்டான் எண்டவுடனை எங்களுக்குக் கோபம் வருகுதெல்லே? அப்பிடித்தான் மற்றவைக்கும் கோபம் ஏன் வராது? உது என்ன ஞாயம்? நாங்கள் எல்லாத்திலையும் உப்பிடித்தான். நல்லாச் சுயநலத்தோடை வாழப் பழகீட்டம். மற்றாக்களுக்கு சுயநலத்தின்ரை வீதம் எண்பதெண்டால்... எங்களுக்கு நூற்றி இருபது. இல்லையே?

மனுசத்தன்மையைப் பற்றிக் கதைச்சால் அது கிலோ என்ன விலை எண்டு கேக்கிற அளவுக்குத்தான் இப்ப நிலைமை இருக்கு. உப்பிடியே போனால் கொஞ்ச நாளிலை செத்தால் தூக்க ஆளிருக்காது. எல்லாரும் அவரவரை போவிடுவினம். அதாலை முதல் வேலையா மனுசத்தன்மை என்ன எண்டு சனத்துக்கு வகுப்பெடுக்க வேணும். அதுக்கு வாத்தியார் தேவை இல்லை. ஒராள் தங்களைச் சுத்தி இருக்கிற மற்றவைக்குச் சொல்லிக் குடுக்கலாம் தானே? – எண்டு முதலி ஒரு நீளமான பிரசங்கத்தை வைச்சான். நான் ஒண்டும் பறையேல்லை.

- வில்லங்கம் விநாசி

# எரிபொருள் விலையை தீர்மானிப்பது யார்?

## விடை சொல்கிறார் ரணதுங்க

கொழும்பு,ஏப்.20

எரிபொருள் விலையை உயர்த்துவதா இல்லையா என்பது தொடர்பான இறுதி முடிவை ஜனாதிபதி மற்றும் பிரதமரே எடுப்பர் என பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தமிழ் சிங்கள புத்தாண்டை கொண்டாடும் முகமாக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டும் நிறுவனமாகவோ அல்லது மக்களுக்கு மானியமுறையில் சலுகை வழங்கும் நிறுவனமாகவோ இருக்க எந்த அரசாங்கமும் தீர்மானம் எடுக்கவில்லை.

ஆனால் இது தொடர்பாக அரசாங்கம் விரைவாக ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். இன்று எல்லோரும் எரிபொருள் விலை கூடுமா, இல்லையா என அதிகம் பேசுகின்றனர். நிதி அமைச்சு அதிகாரிகளும் இது தொடர்பாக எம்முடன் கலந்துடையாடி வருகின்றனர்.

எனினும் விலை மாற்றம் தொடர்பாக அரசாங்கமே தீர்மானம் எடுக்கும். இது தொடர்பாக அமைச்சரவை, பிரதமர் மற்றும் ஜனாதிபதியே முக்கிய முடிவை எடுப்பர் என அமைச்சர் தெரிவித்தார்.

# மைத்திரி வந்த பின்னர் இருக்குது கச்சேரி

கொழும்பு,ஏப்.20

எதிர்வரும் 23ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதி நாடு திரும்பிய தமது புதிய அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தேசிய அரசாங்கத்தில் இருந்து விலகிய "குறூப் 16" உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் இரவு நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால வீட்டில் கலந்துரையாடலை நடாத்தியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன்



யாப்பா அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்துவரும் காலங்களில் தாம் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் குழுவாக எதிர்க்கட்சியின் பொறுப்புக்களை நிறைவேற்ற எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

# தொடர்ச்சிகள்

### முதலமைச்சருடன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினராகவும் அந்தக் கட்சியின் சார்பான முதலமைச்சராகவும்தான் விக்னேஸ்வரன் இயங்கி வருகிறார். தற்போது அவர் அந்தக் கட்சியிலிருந்து விலகி, புதிய கட்சியை ஆரம்பிக்கப் போகிறார் என்பது வரவேற்கத்தக்கது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அவ்வர் வெளியேறுகிறார் என்பது எங்களைப் பொறுத்தவரை முக்கியமானது. அதுவும் கூட்டமைப்பினருடன் முரண்பட்டு வெளியேறுவது மிக முக்கியமானது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைதான் இன்று தமிழ் தேசியத்தின் சாபக்கேடாக மாறியிருக்கின்றது.

அத்துடன், முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆரம்பிக்கும் கட்சி எவ்வாறு இயங்கப்போகிறது என்பதும் முக்கியமானது. கூட்டமைப்பின் கொள்கையுடன் ஒன்றித்துப் பயணிக்க முடியாது எனக் குற்றஞ்சாட்டித்தான் அவர் இந்த முடிவை எடுத்தால், எதிர்காலத்தில் இயங்கப்போகின்ற தரப்புகள் யார் என்பதும் முக்கியம்.

தமிழ் மக்கள் பேரவையிலுள்ள மற்றொரு கட்சியான ஈபிஆர்எல்எப் உடன் இணைய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேச்சு நடத்தியது. எனினும் கூட்டமைப்பின் கொள்கையை விட மோசமான கொள்கையுடைய தமிழர் விடுதலைக் கூட்டணி, சிறிரெலோ, ஈரோஸ் உள்ளிட்ட கட்சிகளுடன் ஈ.பி.ஆர்.எல்.எப். இணைந்ததால் அந்த முயற்சியைக் கைவிட்டோம்.

எனவே முதலமைச்சர் விக்னேஸ்வரனாக இருந்தால்கூட கொள்கையுடன் உறுதியாக உள்ள தரப்புகளுடன் இணைந்து செயற்படவேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு.

கொள்கையுடன் உறுதியாக இருக்கக் கூடிய தமிழ் மக்கள் பேரவையில் உள்ள பொது அமைப்புக்களின் உறுப்பினர்களைச் சேர்த்து கூட்டு ஒன்றை அமைத்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் இயங்குவதாக இருந்தால், தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் அதில் இணைவதை சாதகமாகப் பரிசீலிக்கும்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் எப்படிப்பட்டவர்களுடன் எதிர்காலத்தில் இயங்கப் போகிறார்? அவரது புதிய கட்சி எந்த எந்தத் தரப்புகளுடன் கூட்டுச் சேரப்போகின்றது? ஆகிய கேள்விகளுக்கு சரியான பதில் கிடைக்க வேண்டும்.

தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற மாயைக்குள் இருந்து வெளியேறத் தொடங்கியுள்ளனர். அந்தக் கட்சியின் வாக்கு வங்கியில் அரைவாசிக்கு மேல் கடந்த தேர்தலில் வீழ்ச்சி கண்டுள்ளது.

பலமான மாற்றுக்கு சரியான அடித்தளத்தை நாம் போட்டிருக்கும் வேளையில்தான் முதலமைச்சரின் இந்த அறிவிப்பு - அவரது சிந்தனை வந்துள்ளது என்றார்.

### நீயா? நானா?... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக தெய்வேந்திரனை நியமிக்க வலியுறுத்தி மாகாண கல்வி அமைச்சரும் பதில் முதலமைச்சருமான சர்வேஸ்வரன் பிடிவாதமாக உள்ளார்.

வடக்கு மாகாண செயலாளர்கள் நியமனம் தொடர்பில் மாகாண ஆளுநரும் பதில் முதலமைச்சரும் நேற்று காலை சந்தித்தனர்.

இதன்போது, மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மோகனதாஸ் மாற்றப்படுவதுடன், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக பயிற்சி முகாமைத்துவத்துக்கு பொறுப்பாகவிருக்கும் சிவபாதசுந்தரம், மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகவும் பயிற்சி முகாமைத்துவத்துக்கு பொறுப்பாக தெய்வேந்திரன் நியமிக்கப்படுவார் என்றும் ஆளுநரால் பதில் முதலமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இந்த நியமனங்களை ஏற்க மறுத்த பதில் முதலமைச்சர், தம்மால் பரிந்துரைக்கப்படுபவர்களை மட்டுமே செயலாளர்களாக நியமிக்க முடியும் என தெரிவித்தார். அத்துடன், இந்தியாவில் இருக்கும் முதலமைச்சருடன் தொடர்பு கொண்டு இந்த நியமனங்கள் தொடர்பில் சர்வேஸ்வரன் பேசினார்.

கல்வி அமைச்சின் செயலாளராக தெய்வேந்திரன் நியமிக்கப்படாவிடின், அனைத்து நியமனங்களையும் உடன் நிறுத்துமாறு முதலமைச்சர் தொலைபேசியிலேயே கேட்டுக்கொண்டார். அதனையடுத்து ஆளுநரால் நேற்று வழங்கப்படவிருந்த செயலாளர் மாற்றலை நிறுத்திவைக்குமாறு பதில் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார். அதனால் மாற்றல் கடிதங்களை வழங்குவதை ஆளுநர் பிற்போட்டார்.

இதேவேளை, தெய்வேந்திரனுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து ஆளுநரின் பணிப்பில் அவர் அதிகாரங்கள் அற்ற பதவி நிலையில் தற்போது உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஈ.பி.டி.பியோடு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் யாழ்.மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவுற்ற பின்னர் வாக்குகள் எண்ணும் பணிகள் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அப்பொழுது வட மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளை கூட்டமைப்பு எடுத்துக் கொள்வதெனவும் தீவகத்திலுள்ள மூன்று சபைகளையும் எமக்கு விட்டு தருவதாகவும், வாக்குறுதிகளை வழங்கினார்கள்.

அத்துடன் கடந்த கால பகைகளை மறக்க அவர்கள் கோரியிருந்தனர். சாவகச்சேரி நகர சபையில் எமது ஆதரவை பெற்ற பின்னர் மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் இதையே கூறியிருந்தார். ஆனால் அதனையெல்லாம் மறந்து நாம் ரத்தம் சிந்திய தீவகப் பகுதிகளை கைப்பற்ற எமக்கு எதிராக அவர்கள் களமிறங்கின்ாார்கள்.

அதற்காக கூட்டமைப்புடன் நாம் பகைமை காட்டப்போவதில்லை. மக்களுக்கான சேவைகளை ஆற்ற ஒத்துழைப்போம்.

ஈபிடிபியுடன் கூட்டமைப்பினர் எவரும் பேசவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்த கருத்து தொடர்பில் கேட்ட போது எமது கட்சியின் செயலாளர் டக்ளஸின் தொலைபேசி மாதாந்த சிட்டையை காட்டத் தயார். வடமாகாண அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன் என பலர் பேசியிருந்தனர்.

ஒவ்வொருவரும் நாள்கணக்கில் மாறி மாறி பேசிக் கொண்டேயிருந்தனர். எமது உறுப்பினரான முடியப்பு ரெமீடியஸ் வீட்டுக்கே தான் தேடி நேரே வரவாவென எம்.ஏ.சுமந்திரன் கேட்டார். அதற்கு ரெமீடியஸ் மறுத்து விட்டார்.

எங்களிடமும் பலரும் தொடர்ந்தும் உதவி கேட்டு தொலைபேசி வழியே அழைத்தனர். செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் நாடாளுமன்றில் நேரடியாக இவர்கள் உதவி கேட்டனர்.

கூட்டமைப்பினருக்கு சபைகளை கைப்பற்ற நாம் தேவை. ஆனால் மக்களிடம் ஈ.பி.டி.பி.யிடம் ஆதரவு கேட்டமைபற்றி தெரியக்கூடாதென இரட்டை வேடம் போடுவதாக மேலும் தெரிவித்தார்.

### தொண்டராசிரியர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கு அதிபர்கள் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளர்களால் சிபார்சு வழங்கப்பட்டு நேர்முகப்பரீட்சைக்கும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் பெரும்பாலானோருக்கு நியமனம் வழங்கப்படவில்லை. தற்போது இரண்டாம் கட்ட நேர்முகத்தேர்வு கொழும்பில் நடைபெறுகின்றது.

ஆனால் இந்த நேர்முகத் தேர்வுக்கு பலருக்கு அழைப்புக் கிடைக்கவில்லை. மாறாக நேர்முகத்தேர்வு நடைபெறும் கல்வி அமைச்சுக் காரியாலத்தில் அரசியலாளர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதோடு ஒவ்வொருவரும் ஒவ்வொரு அரசியல்வாதிகளின் சிபார்சுகளுடன் செல்வதாக கல்வி அமைச்சுக்கு நீதிகேட்டுச் சென்ற வடபுலத்து ஆசிரியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்துக்கு என நியமனம் வழங்குகின்ற மத்திய கல்வி அமைச்சு வடக்கு மாகாணத்தின் யதார்த்தமான அறிவுறுத்தலை அல்லது சிபார்சுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். மாறாக அதை விடுத்துவிட்டு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த ஆசிரியத் தொகைக்கு ஆட்களைத் தேடிப்பிடிக்கக்கூடாது. உண்மையாகக் கடமை செய்து சம்பவத் திரட்டுப் புத்தகம் தொலைந்தவர்களுக்கு என்ன மாற்று வழி என்பதனைக் கண்டறிந்து அவர்களுக்கும் நியமனம் வழங்க வேண்டும்.

மாகாணத்துக்கு உட்பட்ட பாடசாலையின் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் உறுதிப்படுத்தலை உதாசீனம் செய்து முறையற்ற விதத்தில் முறைகேடானவர்களுக்கு நியமனம் வழங்குவதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஒருபோதும் அனுமதிக்காது.

ஆகையால் மாகாணக் கல்வி அமைச்சு சிபார்சு செய்து அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற தொகையினருக்கு நீதியான முறையில் நியமனம் வழங்க வேண்மென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.

### மைத்திரிக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாமதிக்கப்படும் நீதி மறுகப்பபடும் நீதியாகும், தனிநாடே தமிழருக்கான தீர்வு, தனிநாட்டுக்கான வாக்கெடுப்புக்கு தமிழர்கள் தயார், இனவழிப்புச் செய்த இலங்கையைப் பாதுகாப்பதை ஐ.நாவே நிறுத்து, ஐ.நா. தீர்மானத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறும் போரின் போது கொல்லப்பட்ட பொது மக்களின் ஒளிப்படங்களின் பனர்களையும் தாங்கியவாறும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### சுவிஸில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றிச்சென்ற பேருந்து ஒன்று நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளாகியது. இதில் 15 பேர் வரை காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற இந்த பேருந்து, சூரிச்சின் வடக்குப்பகுதி அதிவேக வீதியில் இரண்டு கனரக வாகனங்களுடன் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவத்தில் ஒருவர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இறப்பர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விழுந்துள்ளார்.

இதனையடுத்து அவரை காப்பாற்றுவதற்காக சென்ற பிரதேச மக்கள் சிலர் நச்சு வாயுவை சுவாசித்துள்ளதால் பாதிப்படைந்துள்ளதுடன், பாதிப்படைந்த 16 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் தொழிற்சாலையின் ஊழியரும் பிரதேசவாசிகள் நான்கு பேரும் உயிரிழந்துள்ளனர்.

ஏனையவர்கள் ஹொரணை வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### ஆடைக்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது. இந்நிலையில் ஆடை ஏற்றுமதி தொடர்பில் அமெரிக்கா சில விசேட நிபந்தனைகளை பின்பற்றுவதால் அதற்கான வரிச்சலுகை வழங்கப்படாது எனவும் வர்த்தக திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் நிமல் கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரதான ஏற்றுமதி துறையான ஆடை உற்பத்தியின் 70 தொடக்கம் 75 வீதம் அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

# பிரதமர் மோடிக்கு எதிராக பிரிட்டனில் போராட்டம்

லண்டன், ஏப். 20

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காததைக் கண்டித்துப் பிரதமர் மோடிக்கு எதிராகப் பிரிட்டன் வாழ் தமிழர்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் 'கோ பேக் மோடி' என்ற சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர்மோடி பிரிட்டன்சென்றுள்ளார். இந்த நிலையிலேயே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.




தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்கும் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கா ததைக் கண்டித்து, பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக இந்தியா முழுவதும் போராட்டம் நடைபெற்று வருகிறது. கடந்த 12 ஆம் திகதி பிரதமர் மோடி தமிழகம் வந்தபோதும் போராட்டம் நடைபெற்றது. எதிர்க்கட்சிகள், அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் எனப் பல தரப்பிலும் கறுப்புக் கொடி காட்டி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. சமூக வலைதளங்களிலும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்து, 'கோ பேக் மோடி' என்ற 'ஹேஷ்டேக்' உலக அளவில் பிரபலயம் ஆனமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## கியூபா ஜனாதிபதியாக மிக்வெல் டயாஸ் தேர்வு



ஹவானா, ஏப். 20

கியூபாவின் ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோ தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றமையைத் தொடர்ந்து, புதிய ஜனாதிபதியாக மிக்வெல்டயாஸ் கனல் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவுக்கு அருகில் உள்ள மிகச்சிறிய தீவு நாடு கியூபா. இது கரீபியன் கடலில் அமைந்துள்ளது. கம்யூனிஸ்ட் ஆட்சி இருக்கும் இந்த நாட்டில் மறைந்த புரட்சியாளரான பிடல் காஸ்ட்ரோ சுமார் 30 ஆண்டுகள் பிரதமர் மற்றும் ஜனாதிபதியாக இருந்தார். அவருக்குப் பின் அவருடைய சகோதரர் ரவுல் காஸ்ட்ரோ சுமார் 10 ஆண்டுகளாக ஜனாதிபதிப் பதவியில் இருந்தார். இந்த நிலையில், 87 வயதான ரவுல் பதவியில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்திருந்தார்.

இதை அடுத்து, புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் நடைபெற்றது. இதில், துணை ஜனாதிபதியான மிக்வெல் டயாஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். அவரை எதிர்த்து எந்த வேட்பாளரும் நிறுத்தப்படவில்லை. எனவே, மிக்வெல் டயாஸ் கனல் போட்டியின்றி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். சுமார் 40 ஆண்டுகளாக காஸ்ட்ரோ குடும்பத்தினர் ஜனாதிபதியாக இருந்த நிலையில், அந்த குடும்பத்தைச் சேராத ஒருவர் அதிபர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## 300 ஐ.எஸ். அமைப்பினருக்கு மரண தண்டனை விதிப்பு

ஈராக், ஏப்.20

ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய 300 இற்கும் மேற்பட்டோருக்கு மரண தண்டனை விதித்து ஈராக் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அவர்களில், வெளிநாட்டைச் சேர்ந்த ஏராளமானோரும் அடங்குவர்.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணை பாக்தாத்தில் உள்ள நீதிமன்றத்திலும், மொசூலில் உள்ள நீதிமன்றத்திலும் தனித்தனியாக நடைபெற்று வந்தன. இந்த வழக்குகள் மீதான விசாரணை முடிந்ததை அடுத்து, இரு நீதிமன்றங்களும் தீர்ப்பை வெளியிட்டுள்ளன.

பாக்தாத் நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பில், 97 வெளிநாட்டினருக்கு மரண தண்டனையும், 185 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

மொசூல் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பில், 212 பேருக்கு மரண தண்டனையும், 150 பேருக்கு ஆயுள் தண்டனையும், 341 பேருக்கு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஈராக் நாட்டின் பெரும்பாலான பகுதியை ஆக்கிரமித்திருந்த ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக அந்த நாட்டு இராணுவம் போர் தொடுத்தது. இதற்கு அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளும், துருக்கி உள்ளிட்ட அண்டை நாடுகளும் ஆதரவளித்தன.

இதைத் தொடர்ந்து, ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த பகுதிகளில் பெரும்பாலானவற்றை ஈராக் இராணுவம் திரும்பக் கைப்பற்றியது. இதில் ஒரு சில பகுதிகளில் மட்டும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## வடகொரியாவுக்கு ரகசியப் பயணம்

வொஷிங்டன், ஏப். 20

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன் ஆகியோரின் சந்திப்புக்கான ஏற்பாடு தீவிரமாக நடந்து வருகிறது. இந்த நிலையில், அமெரிக்க உளவுப்படைத் தலைவர் மைக் போம்பியோ வட கொரியாவுக்கு ரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

டிரம்ப், கிம் ஜோங் உன் ஆகியோரின் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகவே, உளவுப் படைத் தலைவர் மைக் போம்பியோ வடகொரியாவின் பியாங்யாங் நகருக்குச் சென்றுள்ளார்.

சில தினங்களுக்கு முன் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பதவியில் இருந்த ரெக்ஸ் டில்லர்சனை நீக்கிவிட்டு, அவரது இடத்தில் உளவுப் படைத் தலைவர் மைக் போம்பியோவை நியமிப்பதாக ஜனாதிபதி டிரம்ப் அறிவிப்பு வெளியிட்டார். அதைத் தொடர்ந்துதான் மைக் போம்பியோ வடகொரியாவுக்குப் பயணம் மேற்கொண்டு உள்ளார். (ஆ)



## 72 வயது மூதாட்டியை திருமணம் செய்த 19 வயது இளைஞர்

வொஷிங்டன், ஏப். 20

அமெரிக்காவில் 19 வயது இளைஞர் ஒருவர் 72 வயது மூதாட்டி ஒருவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்காவின் டென்னிசி பகுதியில் உள்ள மேரிவில்லேவை சேர்ந்தவர் அல்மேடா (வயது-72). இவர் கடந்த 2016 ஆம் ஆண்டில் இருந்து தனது கணவரைப் பிரிந்து வாழ்ந்து வந்தார். அதன் பின்னர் ஒரு பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கேரி ஹார்ட்விக் என்ற 19 வயது இளைஞரைச் சந்தித்துள்ளார். இதனை அடுத்து, அந்த நபருடன் அல்மேடாவுக்கு நட்பு ஏற்பட்டது.

இந்த நட்பு பின்னர் காதலாக மாறியுள்ளது. இருவரும் ஒருவரையொருவர் உயிராக நேசிக்க ஆரம்பித்தனர். இதை அடுத்து அல்மேடாவும், கேரியும் திருமணம் செய்ய முடிவெடுத்தனர்.

முதலில் இதற்கு இருவர் குடும்பத்திலும் எதிர்ப்பு எழுந்தது. அதற்கு காரணம் அவர்கள் இருவருக்கும் இடையேயான வயது வித்தியாசமாகும். இதனிடையே குடும்பத்தினரை ஒருவழியாக அவர்கள் சமாதானப்படுத்தி திருமணம் செய்து கொண்டனர். கேரிக்கும், அல்மேடாவுக்கும் இடையில் 58 வயது வித்தியாசம் இருந்தாலும், இருவரும் மிக மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார்கள்.

அல்மேடாவுக்கு 6 பேரன் மற்றும் பேத்திகள் உள்ள நிலையில் இந்த உறவை ஏற்க முடியாமல் அவரது குடும்பத்தினர் ஆரம்பத்தில் தவித்துள்ளனர். ஆனால், நாட்கள் செல்லச் செல்ல அதை ஏற்றுகொண்டுள்ளனர். (ஆ)

## கள்ள உறவில் பெற்றெடுத்த குழந்தை

### எச்.ராஜாவின் சர்ச்சை ருவிட்

சென்னை, ஏப். 20

"தன் கள்ள உறவில் பெற்றெடுத்த கள்ளக் குழந்தையை மாநிலங்களவை உறுப்பினராக்கிய தலைவரிடம் ஆளுநரிடம் கேட்டது போல் நிருபர்கள் கேள்வி கேட்பார்களா ?" என பா.ஜ.க. தேசிய செயலாளர் எச்.ராஜா ருவிட்டரில் பதிவிட்டுள்ள சர்ச்சைக் கருத்து தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதில் தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் கனிமொழி ஆகியோரையே அவர் மறைமுகமாக விமர்சித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெண் பத்திரிகையாளர் எழுப்பிய கேள்விக்கு, தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் பதில் அளிக்காமல் அவரின் கன்னத்தைத் தட்டி உள்ளார். இதைச் சற்றும் எதிர்பாராத அந்தப் பெண் பத்திரிக்கையாளர், ஆளுநரின் செயலைக் கண்டித்து ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டார்.

இந்தச் சம்பவத்தை கண்டிக்கும் விதமாக தி.மு.கவின் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி தனது ருவிட்டர் பக்கத்தில் , "நோக்கம் தவறானதாக இல்லாமல் இருப்பினும், பொது வாழ்வில் இருப்போர், கண்ணியத்தையும், நாகரீகத்தையும் கடைபிடிப்பது அவசியம். " என்று தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார். இதற்குப் பதில் அளிக்கும்விதமாக மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளால் எச்.ராஜா தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (ஆ)

## எரிநட்சத்திரத்தில் வைரக் குவியல்

நியூயோர்க், ஏப் .20

பத்து வருடங்களுக்கு முன்பு பூமியில் விழுந்த எரிநட்சத்திரத்தில் வைரக்கற்கள் இருந்ததைச் சூடான் பல்கலைக்கழக மாணவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் ஓர் எரி நட்சத்திரம் விழுந்தது. நாசா ஆராய்ச்சி மையம் இதைக் கண்டுபிடித்தது. அதற்கு ஆர் மஹாட்டா சிட்டா என பெயரிடப்பட்டது. ஆனால், அந்த நட்சத்திரம் பூமியை நெருங்குவதற்கு சில கிலோ மீற்றர் தூரத்தில் வெடித்துச் சிதறியது. பூமிக்குள் நுழைந்த அந்த நட்சத்திரம் சூடானில் இருக்கும் நுபியன் பாலைவனத்தில் பாதி எரிந்த நிலையில் விழுந்தது.

இந்த நிலையில், இந்த எரிநட்சத்திரத்தைச் சூடானில் இருக்கும் கார்டோம் பல்கலைக்கழக



மாணவர்கள் ஆராய்ச்சி செய்தனர். அப்போது ஆல்மஹாட்டா சிட்டா நட்சத்திரத்தின் உடல் பகுதி முழுவதும் சிறு சிறு வைரக்கற்கள் இருந்தன.

இந்த எரிநட்சத்திரம் வெடித்தபோது வைரம் உருவாக வாய்ப்பு இல்லை. அதற்கு முன்பே அதில் வைரம் இருந்திருக்கலாம். எனவே, இந்த எரிநட்சத்திரத்தில் வைரக்குவியல் இருந்திருக்கலாம் என கருதப்படுகிறது. அவை தூய்மையான வைரக்கற்கள் என்றும் அதற்கு முன்பு இதுபோன்ற வைரத்தைப் பார்த்ததில்லை என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்த வைரம் பூமி தோன்றும் முன்பே உருவாகி இருக்கலாம். மேலும் நட்சத்திரங்கள் மோதி சூரிய குடும்பம் உருவானபோது ஆல்மஹாட்டா சிட்டா எரிநட்சத்திரமும் உருவாகி இருக்கலாம். சரியாக சொல்ல வேண்டுமானால் பூமி உருவான அதே நாளில் இந்த எரிநட்சத்திரமும் தோன்றியிருக்கலாம் என்றும் மனிதர்கள் எப்படி உருவானார்கள் என்பது கூட இந்த ஆய்வின் மூலம் கண்டறிய முடியும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ஆ)

# வேட்பாளர் பதிவுகள் ஆரம்பம்

கொழும்பு,ஏப்.20

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு புதிய நிர்வாகத்தை நியமிக்கும் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும், இதற்கான வேட்பாளர் பதிவுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், குறித்த வேட்பாளர் பதிவுகள் எதிர்வரும் 27ஆம் திகதியுடன் நிறைவுக்கு வரவுள்ளதாகவும் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.



# தொடக்கமே அசத்தல்

பாரிஸ்,ஏப்.20

பிரான்சில் நடைபெற்றுவரும் மொண்டே கார்லோ மாஸ்டர் டென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றில் சேர்பியாவின் முன்னணி டென்னிஸ் வீரர் நொவெக் ஜொகோவிச் வெற்றிபெற்றுள்ளார்.

தொடர்ச்சியான உபாதையால் முக்கிய போட்டிகளை தவறவிட்டு வந்த ஜொகோவிச், தற்போது மீண்டும் போட்டிகளுக்கு திரும்பியுள்ளார்.

இதன்படி பிரான்சில் நடைபெற்று வரும் மொண்டே கார்லோ டென்னிஸ் தொடரில் வெற்றியீட்டி, மீண்டும் பழைய உடற்தகுதியை நிரூபிப்பதற்காக ஜொகோவிச் களமிறங்கியுள்ளார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் குரோடியாவின் போர்னா கோரிக்கை எதிர்கொண்ட ஜொகோவிச் 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

போட்டியின் முதல் செட்டை பிரேக்கர் ஊடாக 7-6 (7-2) என கைப்பற்றிய ஜொகோவிச், இரண்டாவது செட்டை 7-5 என கைப்பற்றி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.



# கெய்ல் புயலில் சன்றைசர்ஸ் சரிந்தது

மொகாலி, ஏப்.20

கிறிஸ் கெய்ல் ஆடிய ருத்ரதாண்டவத்தில் பஞ்சாப் அணியிடம் பஞ்சாகப் பறந்தது சன்றைசர்ஸ் அணி. கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் சன்றைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மொகாலியில் உள்ள பிந்த்ரா மைதானத்தில் நேற்றிரவு பலப்பரீட்சை நடத்தின.

நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. பஞ்சாப் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக லோகேஷ் ராகுலும் கிறிஸ் கெய்லும் களமிறங்கினர். ஆரம்பத்தில் கெய்ல் அடக்கி வாசிக்க, ராகுல் அதிரடி காட்டினார். இந்த ஜோடி அரைச் சதம் கடந்த நிலையில், அணியின் ஓட்ட எண்ணிக்கை 53 ஆக இருக்கும்போது ராகுல் 18 ஓட்டங்களில் அவுட்டானார்.

அடுத்து இறங்கிய மயங்க் அகர்வால் 9 பந்துகளில் ஒரு சிக்ஸர், 2 பவுண்டரியுடன் 18 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். அப்போது பஞ்சாப் அணி 2 விக்கெட்டுக்கு 83 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அடுத்து கருண் நாயர் களமிறங்கினார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் விழுந்தாலும் மறுபுறம் தூணாக நின்றார் கெய்ல். இவர் மீண்டும் தனது அதிரடியைத் தொடர்ந்தார். கிடைத்த பந்துகளை சிக்ஸர், பவுண்டரிக்கு விரட்டினார் கெய்ல். இதனால் பஞ்சாப் அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது.

சிறப்பாக ஆடிய இந்த ஜோடி அணியின் எண்ணிக்கை 168 ஆக இருக்கும்போது பிரிந்தது. கருண் நாயர் 31 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ஆரோன் பிஞ்ச் இறங்கினார். அதிரடியில் மிரட்டிய கிறிஸ் கெய்ல் இந்தத் தொடரின் முதல் சதத்தைப் பதிவு செய்தார்.

இறுதியில், பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 193 ஓட்டங்கள் எடுத்தது. கிறிஸ் கெய்ல் 63 பந்துகளில் 11 சிக்ஸர், ஒரு பவுண்டரியுடன் 104 ஓட்டங்களும், ஆரோன் பிஞ்ச் 14 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஹைதராபாத் அணி சார்பில் ரஷித் கான், சித்தார்த் கவுல், புவனேஷ்வர் குமார் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து களமிறங்கிய ஹைதராபாத் அணியின் தொடக்க வீரர்களாக ஷிகர் தவானும், விருத்திமான் சஹாவும் களமிறங்கினர். ஆயினும் முதல் ஓவரிலேயே காயம் காரணமாக களத்தை விட்டு தவான் வெளியேறினார். சஹாவும் நீடிக்கவில்லை. 6 ஓட்டங்களோடு அவசரமாக ஆட்டமிழந்தார். யூசுப் பதான் 19 ஓட்டங்களோடு வீழ்த்தப்பட்டார். பின்னர் அணித்தலைவர் வில்லியம்சனும், மனீஷ் பாண்டேயும் இணைந்து அணியை மீட்டெடுக்கப் போராடினர். பஞ்சாப் அணியின் களத்தடுப்பு மோசமாக இருந்தது. 5 பிடியெடுப்புகள் தவறவிடப்பட்டிருந்தன. வில்லியம்சனும், மனீஷ் பாண்டேயும் அரைச்சதம் அடித்து அசத்திய போதும், ஹைதாரபாத் அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட் இழப்புக்கு 178 ஓட்டங்களையே பெற முடிந்தது. வில்லியம்சன் 54, மனீஷ் பாண்டே 57 (ஆட்டமிழக்காமல்) எடுத்தனர்.

ஆட்ட நாயகனாக சதமடித்துக்கு கலக்கிய புயல் வீரன் கெய்ல் தெரிவானார். தான் அடித்த சதத்தை இன்று பிறந்த நாளைக் கொண்டாடும் தன் மகளுக்கு சமர்ப்பித்தார் கெய்ல். (அ)




# நெய்மரின் நம்பிக்கை

பிரேசில்,ஏப்.20

ரஷ்யாவில் எதிர்வரும் ஜூன் மாதம் தொடங்கவுள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கு முழுமையாக தயாராகி விடுவேன் என பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் நெய்மர் கூறியுள்ளார்.

பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் நெய்மர், பாரீஸ் செயன்ட் ஜெர்மைன் கிளப் அணிக்காகவும் விளையாடுகிறார். கடந்த பெப்ரவரி மாதம் கிளப் போட்டியில் ஆடிய போது நெய்மர் கால் பாதத்தில் காயம் அடைந்தார். உடனடியாக தாயகம் திரும்பிய அவருக்கு காலில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

காயத்தில் இருந்து குணமடைந்து வரும் நெய்மர் கூறுகையில், 'காயம் மோசமானது தான். ஆனால் தற்போது ஓய்வு எடுத்து வருவதால் தேறி வருகிறேன். ரஷ்யாவில் ஜூன் மாதம் தொடங்கும் உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்குள் நான் முழுமையாக தயாராகி விடுவேன்' என்றார். மே 21-ம் திகதி தொடங்கும் தேசிய அணிக்கான பயிற்சி முகாமில் நெய்மர் பங்கேற்பார் என்று தெரிகிறது.



# மூன்று போட்டிகளுக்குத் தடை

லண்டன்,ஏப்.20

செல்ஸி அணியின் வீரர் மார்கோஸ் அலோன்சோவுக்கு மூன்று போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சௌதெம்டன் அணிக்கெதிரான போட்டியில், ஷேன் லோங்கிடமிருந்து பந்தை தடுக்க மார்கோஸ் அலோன்சோ முற்பட்ட போது, ஷேன் லோங்கின் காலில் உபாதை ஏற்பட்டது.

தொடர்ந்து குறித்த காணொளியை அவதானித்த போட்டி மத்தியஸ்தர்கள், மார்கோஸ் அலோன்சோ தெரிந்தே குறித்த வீரரின் காலை உபாதைக்குற்படுத்தியமையை கண்டறிந்தனர்.

இதனையடுத்தே குறித்த போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மார்கோஸ் அலோன்சோ எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சௌதெம்டன் அணிக்கெதிராக நடைபெறவுள்ள எப்.ஏ.கிண்ண அரையிறுதி, அதனையடுத்து நடைபெறவுள்ள பர்ன்லே அணிக்கெதிரான பிரீமியர் லீக் போட்டி மற்றும் 28ம் திகதி நடைபெறவுள்ள சுவான்ஸி அணிக்கெதிரான போட்டியிலும் விளையாட மாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தடை குறித்து சுதந்திர விசாரணை ஆணைக்குழு விசாரணையொன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 20.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.